# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 164** **நாள்: 08.11.2017**

## வடகிழக்கு பருவமழையையொட்டி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.அதுல்யா மிஷ்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வடகிழக்கு பருவமழையையொட்டி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.அதுல்யா மிஷ்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (08.11.2017) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில் வடகிழக்கு பருவமழையையொட்டி மழைநீர் தேங்கிய இடங்களாக கண்டறியப்பட்ட பகுதிகளில் மழைநீரை அகற்றிட மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும், கால்வாய்களில் உள்ள அடைப்புகள் மற்றும் கழிவுகளை அகற்றிய முறைகள் குறித்தும், இப்பணியின் போது பயன்படுத்திய வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாடுகள் குறித்தும், தாழ்வான பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டவர்களுக்கு வழங்கிய உணவு மற்றும் பாதுகாப்பான குடிநீர், மருத்துவ சேவைகள், தொற்றுநோய்கள் பரவாமல் தடுத்திட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், பொதுமக்களுக்கு லாரிகள் மூலம் விநியோகிக்கும் குடிநீர் மற்றும் உயர்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலிருந்து பொதுமக்களுக்கு நேரடியாக விநியோகிக்கும் நீரில் உள்ள குளோரின் அளவினை பரிசோதித்து வழங்கிய முறைகள் குறித்தும், இனிவருங்காலங்களில் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் இந்திய ஆட்சிப்பணி நிலையில் மண்டல கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

ஆய்வு கூட்டத்திற்கு பின் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.அதுல்யா மிஷ்ரா, இ.ஆ.பா., அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடக்கு பருவமழையையொட்டி ஒவ்வொரு மண்டலத்திற்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் இந்திய ஆட்சிப் பணியாளர் நிலையில் ஒரு அலுவலரை நியமித்து மீட்பு மற்றும் நிவாரப்பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி

முழுவதும் பல்வேறு இடங்களுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். பெருநகர சென்னை மாநகரில் வடகிழக்கு பருவமழை துவங்கிய நாளிலிருந்து தற்பொழுது வரை 50.20 செ.மீ. மழைப்பொழிந்த நிலையிலும் உடனடியாக இந்திய ஆட்சிப்பணியாளர் நிலையில் நியமிக்கப்பட்ட கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மண்டலங்களுக்கு சென்று மழைநீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்ட இடங்களை பார்வையிட்டு ஆய்வு நடத்தி மண்டல அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மூலமாக உரிய நடவடிக்கை மேற்கொண்டனர். இதன் பயனாக குறைந்த நாட்களில் அனைத்து இடங்களிலும் மழைநீர் அகற்றப்பட்டு பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை எவ்விதத்தில் பாதிப்பு ஏற்படாத வகையில் அனைவராலும் பாராட்ட தகுந்த வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மழைநீர் வடிகால் இல்லாத இடங்களில் ஜே.சி.பி. இயந்திரத்தினைக் கொண்டு தற்காலிக வடிகால்கள் ஏற்படுத்தியும், ராட்சத மோட்டார் பம்பு மூலம் மழைநீர் வழிந்தோட வழிவகை செய்யப்பட்டது. மேலும், இனிவருங்காலங்களில் மழைநீர் தேங்கிய இடங்களாக கண்டறியப்பட்ட இடங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் நிரந்தர தீர்வுகாண திட்டம் தயாரிக்கப்பட்டு முதன்மைச் செயலாளர் மூலம் அரசுக்கு பரிந்துரை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

இராயபுரம் மண்டலத்தில் பாதுகாப்பற்ற வசிக்கத் தகுந்த கட்டிடங்கள் என 141 கட்டிடங்கள் என கண்டறியப்பட்டு அவர்களுக்கு நோட்டீஸ் வழங்கி, கட்டிடங்களின் கதவுகளில் ஒட்டி உரிமையாளர்களிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. 8 கட்டிடங்களை அதன் உரிமையாளர்களே இடித்து விட்டனர். மீதமுள்ள கட்டிடங்களின் உரிமையாளருக்கும், வீட்டு வாடகைதாரருக்கும் இடையிலான பிரச்சனைகள் குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், கட்டிடங்கள் ஆபத்தானவை என அறிவிக்கும் வகையில் எச்சரிக்கை பலகை வைத்து சுற்றி வளையம் போடப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு முடிந்தவுடன் கட்டிடங்கள் அகற்றப்படும்.

105 ஜே.சி.பி. இயந்திரங்கள், 45 டிப்பர் லாரிகளும், 235 காம்பேக்டர்கள், 20 பாப்காட் இயந்திரங்கள் என மொத்தம் 405 வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது. மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியத்தைச் சார்ந்த 43 சூப்பர் சக்கர் இயந்திரங்கள், 113 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 30 ஜெட்ராடிங் கம் உறிஞ்சம் இயந்திரங்கள், 238 தூர்வாரும் இயந்திரங்கள், 20 கழிவுநீர் ஊர்திகள் என மொத்தம் 444 வாகனங்கள் மழைநீர் அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் இதுவரை மொத்தம் 1265 மருத்துவ முகாம்கள் மற்றும் 474 நடமாடும் மருத்துவ முகாம்கள் என மொத்தம் 1739 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 1,59,850 நபர்கள் மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழையால் வீடுகளில் சமையல் செய்ய இயலாத நிலையில் உள்ளவர்களுக்கு உணவு வழங்கிட அரசு உத்தரவிட்டதன் அடிப்படையில், நிவாரண மையங்களின் மூலம் இன்று வரை 3,43,200 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. ரிப்பன் மாளிகையில் உள்ள பேரிடர் மேலாண்மை மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டு அறையின் மூலம் பெறப்பட்ட புகார்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கண்காணிப்பு அலுவலர்கள், துணை ஆணையாளர்கள், பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**